**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**...**

**IN THE COURT OF Judicial Magistrate Court, Shencottai**

**CC No. 385/2016**

Deposition of the witness for Prosecution **PW** 5

Name : **மணி**

Father's/Husband's Name :

Age :

Village and Taluk :

Caste and Religion :

Calling :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (23.02.2026)

A1, A2 present, A3, A4 died.

<u>முதல் விசாரணை</u>

நான் செங்கோட்டையில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். அ.சா.1 கருத்தப்பாண்டி, அ.சா.2 முத்துலட்சுமி ஆகியோர்களை தெரியும். எதிரிகளுக்கும், அ.சா.1, அ.சா.2 க்கும் இடப்பிரச்சனை இருந்தது. சுமார் 2016 ம் வருடம் ஒருநாள் செங்கோட்டையில் இருந்தேன். எனக்கு அ.சா.1 ன் மகள் சிவசக்தி என்பவர் போன் செய்து ஊரில் இடப்பிரச்சனை சம்மந்தமாக எனது அப்பா, அம்மாவிற்கு காயம் ஏற்பட்டுள்ளது என்று சொல்லி என்னை போகச்சொன்னார்கள். நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது நான் செல்வதற்குள் காயம்பட்ட இருவரும் செங்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சென்றுவிட்டார்கள். எனவே நான் செங்கோட்டை அரசு மருத்துவமனை சென்று பார்த்தபோது கருத்தப்பாண்டிக்கு தலையிலும், முத்துலட்சுமிக்கு கையிலும் காயம் ஏற்பட்டது. கருத்தபாண்டியை மேல்சிகிச்சைக்காக தென்காசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள்.

அரசு தரப்பில் சாட்சி வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2. கடந்த 22.03.2016 ம் தேதி மாலை 03.15 மணிக்கு நான் சொந்த வேலை விஷயமாக தேன்பொத்தை பால் பண்ணை தெருவில் நின்று கொண்டிருந்தபோது

எதிரிகள் கருத்தப்பாண்டி வீட்டு பக்கம் வைத்து, கருத்தப்பாண்டியையும், முத்துலட்சுமியையும் பார்த்து அசிங்கமாக பேசினார்கள் என்றால் சரியல்ல. செங்களால் எறிந்து இருவருக்கும் காயம் ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. சம்பவத்தை பார்த்த நானும், சக்திவேல், முருகன், உண்ணாமலையம்மாள் ஆகியோர்கள் சத்தம் போடவும் எதிரிகள் அ.சா.1, அ.சா.2 ஆகியோர்களை பார்த்து மிரட்டினார்கள் என்றால் சரியல்ல. சம்பவத்தை நேரில் பார்த்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது அதற்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2026.02.23 17:53:12 +0530

Judicial Magistrate, Shenkottai

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF Judicial Magistrate Court, Shencottai**
**CC No. 385/2016**

Deposition of the witness for Prosecution **PW** 4
Name : **சக்திவேல் முருகன்**
Father's/Husband's Name :
Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (23.02.2026)

A1, A2 present, A3, A4 died.

<u>முதல் விசாரணை</u>

நான் தேன்பொத்தையில் குடியிருந்து எலக்டிரிசியன் வேலை செய்து வருகிறேன். அ.சா.1, அ.சா.2 எனது அப்பா, அம்மா. எதிரிகளை தெரியும். எங்களுக்கும், எதிரிகளுக்கும் இடத்தகராறு இருந்து வந்தது. கடந்த 22.03.2016 ஆம் தேதி மாலை 3 15 மணிக்கு நானும் எனது அப்பா அம்மா ஆகியோர்கள் எங்கள் வீட்டில் இருந்து திருநாவுக்காக கோவிலுக்கு கிளம்புவதற்காக செல்லும்போது, எதிரிகள் அனைவரும் எனது அம்மாவையும், அப்பாவையும் பார்த்து தேவடியா மவனே இடத்தை எழுதி தராவிட்டால் உங்களை கொன்று விடுவோம் என்று திட்டினார்கள். எங்கள் வீட்டின் முன்பு அடுக்கி இருந்த செங்கலை எடுத்து எதிரிகள் பழனியம்மாளும், முத்துராமனும் எடுத்து எனது அப்பாவின் தலையிலும், தோள்பட்டையிலும், இடது கை நடு விரலிலும் தாக்கினார்கள். அப்போது எனது அம்மா முத்துலட்சுமி தடுக்க போனபோது பழனியம்மாள் முத்துராமலிங்கம் வைத்திருந்த செங்கலால் எனது அம்மாவை அடித்ததில் தலையிலும் உடலிலும் காயம்பட்டது. அதன் பின்னர் காயம்பட்ட எனது அப்பா, அம்மாவை செங்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றேன். எனது அம்மாவை உள்நோயாளியாக அனுமதித்து விட்டு எனது அப்பாவை மேல் சிகிச்சைக்காக தென்காசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். தகவல் அறிந்து போலீசார் வந்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜராகியிருந்தும், வழக்கறிஞர் ஆஜராகியிருந்தும் குறுக்குவிசாரணை செய்வதற்கு முன்வரவில்லை எனவே குறுக்குவிசாணை இல்லை என முடிக்கப்படுகிறது.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2026.02.23 17:53:17 +0530

Judicial Magistrate, Shenkottai